432

432

துறைசை யாதீன வெளியீடு 13.

ACL-TVAL
01859
1131

# சைவ சமயம்.

கும்பகோணம்
யதார்த்தவசனி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
1944.

உ
சிவமயம்.

# சைவ சமயம்.

இது
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
உம-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்
கட்டளைப்படி

ஷை ஆதீனத்து வித்துவான்
வி. சிதம்பர ராமலிங்கபிள்ளை

தூத்துக்குடிச்
சைவசித்தாந்த சபையின்
61-வது ஆண்டு நிறைவு விழாவிற் செய்த
தலைமையுரை.

கும்பகோணம்
யதார்த்தவசனி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
1944.

சிவாப்யாம் நம :

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறையாதீனத்து வித்துவான்
திரு: வி. சிதம்பர ராமலிங்கபிள்ளையவர்கள்
தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின்
61-வது ஆண்டு நிறைவு விழாவில் செய்த

# தலைமையுரை.

திருச்சிற்றம்பலம்.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியு
நமச்சி வாயவே நானறி விச்சையு
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்.

சிவநேயச் செல்வர்களாகிய பெரியோர்களே,

இன்று நாமெல்லாம் இங்கே நிறுவப்பட்டிருக்கும் சைவ சித்தாந்த சபையின் 61-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இவ்விடத்திற் கூடியிருக்கிறோம். ஒரு சபையின் ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைவராக அறிவு முதலியவற்றில் சிறந்தவரொருவரைத் தேர்ந்தெடுப்பது மரபு: அது முறையுமாகும். அவ்வாறிருக்க இந்த 61-வது ஆண்டு நிறைவு விழாவுக்கு அறிவு முதலியவற்றில் மிக்க கீழ்நிலையிலிருக்கும் என்மீது அந்தத் தலைமைப்பாரம்

விழுந்தது. நீங்கள் இந்தச் சுமையை என்மீது சுமத்துவதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. எனக்குப் பன்னிரண்டு வயது நடக்கும்பொழுது அஃதாவது நாற்பத்து நான்கு வருஷங்களுக்குமுன் இவ்வூர்ச் சிவாலயம் மிகச் சிறியதாய்த் தணிவான நிலையிலிருந்ததை நீங்கள் அறிவீர்கள். அந்தக் காலத்தில் சுந்தரமூர்த்திப் பௌராணிகரென்று பிற்காலத்திற் பெயர் வழங்கிய திரு: கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் அந்தச் சிவாலயத்திற் கந்த புராண படனம் செய்துவந்தார்கள். மூன்றுவது பாரத்தில் சின்னக் கோயிற் பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருந்த நான் அப்புராண படனத்தில் ஈடுபட்டிருந்தேன். இப்பொழுது இச்சபையின் அமைச்சராக விளங்கும் திரு: தெ. சு. சோமசுந்தரப் பிள்ளையவர்களது பிதா திரு: தெ. சு. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் எனது ஈடுபாட்டைத் தெரிந்து, அவர்கள் மளிகை செல்லும்போதும் மீளும்போதும் எனக்குச் சிறிது சிறிதாகச் சைவ சித்தாந்தத் தேனமுது அருத்திவந்தார்கள். அவர்கள் அக்காலத்தூட்டிய சித்தாந்த அறிவே பிற்காலத்தில் நான் சித்தாந்த சாஸ்திரங்களைத் தெரிந்து தெளிவதற்குப் பேராதரவாக இருந்தது. இங்ஙனம் இச்சபையின் முன்னை யமைச்சரவர்களால் நன்மையடைந்த நான் இப்பொழுது சபையினர் சுமத்தும் பொறுப்பை வகிக்கவேண்டியவன்தானே. இனி எனது முப்பத்திரண்டாவது ஆண்டிலே எனக்கு முதல் விவாகம் இந்த நகரத்திலேதான் நடைபெற்றது. அப்பொழுதும் எனது விவாகத்திற்கு வேண்டும் பொறுப்பு முழுமையும் ஏற்றுக்கொண்டவர்கள் இந்தச் சபையினரே. அன்றியும் நான் திருநெல்வேலி இந்து கலாசாலையில் தமிழ்ப் போதகாசிரியனாக இரண்டு வியாழ வட்டங்களுக்குமேல் சேவை

செய்தேனென்பதை நீங்கள் அறிவீர்கள். நான் இந்தச் சபையின் நிரந்தரத் தலைவராக விளங்கும் சிவபுரம் மிட்டாதார் திரு: சிவ. அவர்களது பள்ளிக்கூடத்தில் கணக்காயனாக இருந்த அனந்தரம் கலாசாலைத் தொழிலை மேற்கொள்ளும் சிறப்பு எனக்குக் கிடைத்தது. கலாசாலைத் தொழிலின் விடுதிபெற்ற மறுநாளே நமது திருவாவடுதுறை யாதீனத்தில் இப்பொழுது ஞானச் செங்கோல் செலுத்திவரும் மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் கட்டளைப்படி அவ்வாதீன கைங்கரியத்தை மேற்கொண்டேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களோ இந்த நகரத்தினர். அவர்கள்பால் நீங்கள் செய்துகொண்ட பிரார்த்தனை ஒன்றுக்கும் பற்றாத என்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது. இவ்வாறு எனது இளமைப் பருவம் தருணப் பருவம் முதுமைப் பருவமாகிய மூன்று நிலைகளிலும் உங்களோடும் உங்கள் நகரத்தோடும் பிரியாதிருக்கும் எனக்கு நீங்கள் கொடுத்த பொறுப்புப் பெரிதே. எனினும் உங்களது அன்பும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அருளும் துணையாகக் கொண்டு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களது ஜன்ம நக்ஷத்திர தினமாகிய இன்று எனது கடமையாகிய தலைவர் முன்னுரைச் சொற்பொழிவு புரிய முற்படுகின்றேன்.

உ

ஶிவாஹ்யாம் நம:

# சைவ சமயம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
        காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
        பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
        வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
        தழைக மாதோ.

உலகத்திலேயுள்ள சமயங்கள் பலவாகும். சமயங்கள் மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்று நன்னெறியிலே ஒழுகி, மேலான சுகவாழ்வை அடைவதற்குச் சாதகமாயுள்ள ஞான ஆலயங்களாகும். சமயங்கள் நாம் கண் முதலிய இந்திரியங்களால் அறியும் அசேதனப் பிரபஞ்சத்தின் சொரூபத்தையும், கண் முதலிய இந்திரியங்களால் அறியவாராமல் அநுமானப் பிரமாணத்தால் அறியக்கிடக்கும் சேதனப் பிரபஞ்சமாகிய உயிரின் சொரூபத்தையும், முழுமுதற் கடவுளாகிய பரமான்மாவின் சொரூபத்தையும் சந்தேக விபரீதங்களில்லாமல் அவரவர் தகுதிக்கேற்பத் தெளிவாக விளக்கிக் காட்டுகிற காரணத்தால், அவை ஞானதீபங்களாகும். சமயங்கள்

நமது சரீர சுகத்திற்கும் ஆன்ம சுகத்திற்கும் அநுகூல மாகும் நன்மைகளை விதித்து, அவைகளுக்கு விரோதமா கிய தீமைகளை விலக்கி நம்மைக் காப்பாற்றுதலால், அவை ஞான மருத்துவராகும். சுருங்கச் சொல்லின், சமயங்க ளெல்லாம் மனிதர்கட்கு அவ்வவர் தகுதிக்கேற்ப இகபர சுகங்களுக்கு இன்றியமையாத சாதகங்க ளெல்லாவற்றை யும் குறைவறக் கொடுக்கும் சப்தப்பிரம ரூபமான ஒரு கற்பக விருக்ஷமாகும்.

இனிச் சமயம் என்பதன் பொருளைத் தெரிவோம். போதல், உணர்தல் என்னும் பொருளைத்தரும் 'இ' என்னும் தாதுவின் ஆதேசமாகிய 'அய்' என்பது 'ஸம்' என்னும் உபசர்க்கத்தோடு சேர்ந்து 'சமய்' என்றாய், உடன்போதல், உடன்படல், நியமித்தல் என்னும் பொருளை உணர்த்தி நின்றது. அதனோடு 'அ' என்னும் விகுதி சேர்ந்து 'சமய' என்றாயிற்று. 'அ' என்னும் விகுதி தொழிற் பெயர்ப் பொருளையும், கருவிப் பொருளை யும், செயப்படு பொருளையும் குறிக்கும். ஆகவே 'சமயம்' என்னும் சொல் நியமித்தல், நியமித்தற் கருவி, நியமிக்கப் பட்டது என்னும் பொருளைத் தரும். இதனால் சமயம் என்பது சுருதியிலே நியமிக்கப்பட்ட மேலான பயனை அடைவதற்கு அநுகூலமாகிய பொருள்களின் நியமம் என்று ஆகும்.

இனி இச்சமயங்கள் முழுமுதற்கடவுள் நிறுத்தியதும், முதற் கடவுளுடைய ஆணையினாலே தத்துவ ஞானம் கைவரப்பெற்றோர் நிறுத்தியனவும், கலைஞானம் கைவரப் பெற்றோர் நிறுத்தியனவும், பிராகிருத விசேடபுத்தி கைவரப் பெற்றோர் நிறுத்தியனவும், பிராகிருத சாமானிய

புத்திமான்கள் நிறுத்தியனவுமெனப் பலவகைப்படும். இவற்றுள் முழுமுதற்கடவுள் நிறுத்திய சமயம் சமயலக்ஷணம் முழுவதும் ஒருங்குடையதாய்த், திரிபு இல்லாமல், ஏனைச் சமயங்கள் சொல்லும் விஷயங்களை யெல்லாம் தன்பால் அடக்கிக்கொண்டு விளங்கும். ஆதலின் அது பூர்ணசமய மாகும். மற்றைத் தத்துவ ஞான சித்தியுடையவர்களும், கலைஞான சித்தியுடையவர்களும், பிராகிருத விசேட புத்தி யுடையவர்களும், பிராகிருத சாமானிய புத்தியுடையவர் களும் நிறுத்திய சமயங்களெல்லாம் ஒவ்வோர் வகையின ராகிய அதிகாரிகளுக்கே உரியனவாய்க் காலந்தோறும் வேறுபட்டுவரும். ஆதலின் அவைகள் ஏகதேச மார்க்கங் களாம்.

இனி இச்சமயங்களை மற்றொரு முறையாகவும் விசாரிப் பாம். பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிலைநிறுத்திய சமயங்கள் பிராகிருத விசேட புத்தி கைவரப் பெற்றோர் நிறுத்திய சமயங்களில் வியாப்பியமாம். பிராகிருத விசேட புத்தி கைவரப்பெற்றோர் நிறுத்திய சமயங்கள் கலைஞானம் கைவரப் பெற்றோர் நிறுத்திய சமயங்களில் வியாப்பியமாம். கலைஞானம் கைவரப்பெற்றோர் நிறுத்திய சமயங்கள் தத் துவஞானம் கைவரப்பெற்றோர் நிறுத்திய சமயங்களில் வியாப்பியமாம். தத்துவஞானம் கைவரப்பெற்றோர் நிறுத் திய சமயங்கள் முழுமுதற் கடவுள் நிறுத்திய சமயத்தில் வியாப்பியமாம்.

இப்பொழுது கூறிய இப்பொருளை ஓர் உதாரணவாயி லாக விளக்குவாம். ஆயிரம், நூறு, ஐம்பது, இருபத் தைந்து, ஐந்து என்னும் ஐந்து எண்களைப்பற்றிக் கவனிப் போம். ஐந்து இருபத்தைந்தனுள் வியாப்பியம். இருபத்

தைந்து ஐம்பதில் வியாப்பியம். ஐம்பது நூற்றில் வியாப்பியம். நூறு ஆயிரத்தில் வியாப்பியம். வியாப்பியம் என்றால் உள்அடங்கியது என்பதாம். இதனைப் பின்பற்றிப் பார்க்கும்பொழுது சாமானிய உலக அறிவு உள்ளவர்கள் ஏற்படுத்திய சமயங்கள் விசேட உலக அறிவு உள்ளவர்கள் ஏற்படுத்திய சமயங்களினுள் அடங்கும். விசேட உலக அறிவு உள்ளவர்கள் ஏற்படுத்திய சமயங்கள் வேதம் முதலிய கலைஞானம் கைவரப்பெற்றோர் ஏற்படுத்திய சமயங்களினுள் அடங்கும். கலைஞானம் கைவரப் பெற்றோர்கள் ஏற்படுத்திய சமயங்கள் தத்துவ ஞானம் கைவரப் பெற்றோர்கள் ஏற்படுத்திய சமயங்களினுள் அடங்கும். தத்துவ ஞானம் கைவரப் பெற்றோர்கள் ஏற்படுத்திய சமயங்கள் சர்வஞ்ஞராகிய முழுமுதற்கடவுள் நிலைநிறுத்திய சமயத்தினுள் அடங்கும். இங்கே கூறிய விஷயம் சிவஞான சித்தியாரிலே,

"ஓதுசம யங்கள்பொரு ளுணருநூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமலுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
லிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினா லிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மானடிக்கீழ் அடங்கும்"

என்று கூறப்பட்டது.

இனி முதற்கடவுள் நிறுத்திய சமயம், சமயங்களுள் வைத்து ராஜாங்க அதீதசமயம் எனப்படும். தத்துவ ஞானம் கைவரப் பெற்றோர் நிறுத்திய சமயங்கள் அகச் சமயங்களென்றும், கலைஞானம் கைவரப்பெற்றோர் நிறுத்திய சமயங்கள் அகப்புறச் சமயங்களென்றும், விசேட

உலக அறிவுள்ளவர்கள் நிறுத்திய சமயங்கள் புறச் சமயங்கள் என்றும், சாமானிய உலக அறிவுள்ளவர்கள் நிறுத்திய சமயங்கள் புறப்புறச் சமயங்கள் என்றும் பெரியோர்களால் வழங்கப்படும். இந்த ஐந்துவகைப்பட்ட சமயங்களிலே முதற்கடவுளாலே நிறுத்தப்பட்ட ராஜாங்க அதீத சமயம் ஒன்றேயாய், எல்லாப்படியானும் சத்தியமாகும். மற்றை நான்கு சமயங்களும் பல்பல பிரிவுகள் உடையனவாய், அப்பிரிவுகளுள்ளும் பலபல பிரிவுகள் உள்ளனவாய் விரிந்து நடக்கும். ஆகலான் இந்த நால்வகைச் சமயங்களும் அவ்வவற்றிற்குரிய அதிகாரி தாரதம்மியம் பற்றி வேண்டப்படுவனவாம். இவற்றிற் சாமானிய உலக அறிவுடையோர் நிறுத்திய சமயங்களைவிட விசேட உலக அறிவுடையோர் நிறுத்திய சமயங்களில் சத்தியம் மிகுந்தும், விசேட உலக அறிவுடையோர் நிறுத்திய சமயங்களைவிடக் கலைஞானம் கைவரப் பெற்றோர் நிறுத்திய சமயங்களில் சத்தியம் மிகுந்தும், கலைஞானம் கைவரப் பெற்றோர் நிறுத்திய சமயங்களைவிடத் தத்துவ ஞானம் கைவரப் பெற்றோர் நிறுத்திய சமயங்களில் சத்தியம் மிகுந்தும் காணப்படும். அவ்வளவன்றி முழுதும் அசத்தியமாய்க் காணப்படும் சமயம் யாதும் இல்லை.

இதுவரை நாம் செய்த ஆராய்ச்சியால் சமயம் என்பது உயிர்கள் படிப்படியாக அறிவு விளக்கம் பெற்று மேனிலையை அடைந்து மோக்ஷமாகிய பேரின்ப நிலயத்தை அடைதற்கு வகுக்கப்பட்ட படிக்கட்டுகளென்பது தெரிந்தோம். கருவூர்த் தேவரும்.

"பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறி"

என்றருளிச் செய்தமையாலும் இவ்வுண்மை விளங்கும்.

இனி, முன்னர் அதீதசமய மென்று சொல்லப்பட்ட இராஜாங்க சமயமே சித்தாந்த சைவம் எனப்படும். இப்பொழுது சித்தாந்த மென்பதை ஆராய்வோம். சித்தாந்த மென்பது சித்தம் + அந்தம் எனப் பிரிக்கப்படும். அந்தம் என்பது முடிபு. சித்தம் என்பது சித்தித்தது; அஃதாவது கிடைத்தது என்று பொருள்படும். ஆகவே ஆராய்ச்சி அநுபூதி யென்னும் இரண்டாலும் நமக்குக் கிடைத்ததாகிய முடிபு என்பதாம். இனி இச்சொல்வழக்கு உத்தர மீமாம்சையில் கூறப்படும் அதிகரண சப்தத்திற்குப் பொருள் கூறுமிடத்து நீலகண்டவாசிரியர்,

> 'விஷய ஸம்சய பூர்வபக்ஷ ஸித்தாந்த நிர்ணய
> ஸங்கதிநாம் ஆதாரத்வம் இஹாதி கரணத்வம்'

என்று கூறியிருக்கின்றார்.

திராவிட மகாபாஷ்யகாரராகிய ஸ்ரீ (108) மாதவச் சிவஞான யோகிகளும் சிவஞானபோத மாபாடியத்தில்,

> 'தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மறுத்துக் கூறும் சித்தாந்தத் துணிபும், இயைபு மென்னும் இவற்றிற்கு நிலைக்களம் ஈண்டு அதிகரணமெனப்படும்' என்று அருளுகின்றார்கள்.

ஆகவே சித்தாந்த மென்னும் சொல் ஒருவன் ஒரு விஷயத்தைச் சொல்லியவழி, அவ்விஷயத்தில் பலர்க்கு ஐயப்பாடு தோன்ற, அப்பலரும் தாம் தாம் கண்ட அளவிலே தமது கருத்தைக் கூற, அப்பொழுது முற்கூறியோன் இன்ன இன்ன காரணங்களால் அப்பலர் கூறும் கருத்துக்கள் அனைத்தும் பொருந்தா என மறுத்து, இன்ன இன்ன காரணங்களால் தான் கூறிய விஷயமே பொருத்தமானது என்று துணிந்த இடத்து வழங்கப்படுவது என்பது புல

னும். எனவே, சித்தாந்தமே முடிந்த முடிபு; அதனை மறுத்துக் கூறுவது யாதுமில்லை என்பது பெறப்பட்டது.

சித்தாந்தத்தின் பெருமையானது

'ஆப்தோக்தி ரத்ர ஸித்தாந்த: சிவஏவ ஆப்தி மாந்யத:
நதாப் யாம் ஸத்ருச: கச்சிச் ச்ரேய ஆப்திஷிதாயக: என்றும்

ஸித்தாந்த ஏவ ஸித்தாந்த: பூர்வ பக்ஷாஸ்தத: பரே
ஆப்தஸ்துசிவ ஏவைக: சிவாந்யே த்வசிவா மதா:' என்றும்

'ஸித்தாந்த: ஸேவ்யதே ஸத்பி: சக்திபாத பவித்ரிதை:

என்றும் இரத்தினத் திரயமென்னும் நூலிலே ஸ்ரீகண்ட சூரியென்னும் ஆசாரியரால் நன்கு கூறியருளப் பட்டது. அவ்வாசிரியர் கூறுமாறு 'இங்கே ஆப்த வாக்கிய மென்பது சித்தாந்தமாகும்; எதனால் சிவனொருவனே ஆப்தனா யிருக்கின்றானோ அதனால். சித்தாந்தம் சிவ னென்னும் இரண்டனோடும் ஒப்பாக வேறொரு பொருள் நன்மையை யுண்டாக்குவதில்லை. சித்தாந்தம் ஒன்றுதான் சித்தாந்தம்: மற்றவை யெல்லாம் பூர்வபக்ஷங்கள். சிவன் ஒருவன்தான் ஆப்தன்; சிவனின் வேறானோரெல்லாம் சிவத்தன்மை யில்லாதவர்களென்று கொள்ளப்பட்டனர். சித்தாந்தமானது சத்திநிபாதத்தால் தூய்மையாக்கப் பட்ட சத்துக்களால் பூஜிக்கப்படுகின்றது' என்பதாம்.

இதுகாறும் சொல்லியவற்றால் சித்தாந்தமென்பது முடிந்த முடிபு என்றும் அதனை மறுப்பது யாதுமில்லை யென்றும் தெரிந்தோம். இவ்விடத்தில் ஓர் ஐயப்பாடு தோன்றலாம். அஃதென்னையெனின், இக்காலத்தில் சிலர் சித்தாந்தத்தை மறுத்துப் பேசுகின்றதை நாம் காண்கின் றோமே. அங்ஙனமிருக்கச் சித்தாந்தத்திற் கூறப்பட்டது

எவ்வாறு முடிந்த முடிபாக ஆகும் என்பதாம். இந்த ஐயப்பாட்டை இரத்தினத் திரய ஆசிரியராகிய ஸ்ரீகண்ட சூரி யென்பவர் எடுத்துக்கூறி அதற்குச் சமாதானமும் பின்வருமாறு கூறியிருக்கின்றார். அஃதாவது,

'காமகாரி தயாந்யைஸ்து நிந்த்யதே பசுசாஸ்த்ரவத் சஉ
நஹி கஸ்தூரிகாமோத: புருஷை: ப்ரதிஹந்யதே
ஹேதுபி: ஸாத்யதே கிம்து தந்யை ராக்ராயதே ஸதா' சங

என்பதாம். 'இஷ்டப்படி செய்கின்ற மற்றவர்களால் பசுக்களால் செய்யப்பட்ட நூல்களைப்போலச் சித்தாந்தமும் நிந்திக்கப்படுகிறது. கஸ்தூரியின் வாசனையானது மக்களால் வெறுக்கப்படுகிறதில்லை: மேலும் ஏதுக்களால் சாதிக்கப்பட்டுத் தன்யர்களால் எப்பொழுதும் முகரப்படுகிறது' என்பது அதன் பொருள். இவ்விடத்தில் நமது திராவிட மாபாடியகாரர் சித்தாந்தமரபு கண்டன கண்டனத்தில் 'பொருண்மேல்வைத் தெழுதிய குற்றமெல்லாம் நானமென்பது மணக்கமழ்கின்ற பொருள் என்றவழி அது நாவிலுண்பதுவோ என்றுசங்கிப்பார் கூற்று' என அருளியிருப்பது நினைவிற்கு வருகின்றது.

இதுவரை சித்தாந்தமென்ற சொல்லின் பொருளும், அச்சொல் வழக்காறும், அதன் பெருமையும் நாம் தெரிந்தோம். இனி அதீத சமயமாகிய சைவ சித்தாந்தத்தை மேற்கொண்டவர்கள் வேதம் சிவாகம மென்பனவற்றிற் கூறப்பட்டவற்றிற்குச் சிறிதும் மாறுபாடின்றிப் பதி பசு பாச மென்னும் மூன்று பொருள்களின் தடத்த சொரூப லக்ஷணங்களைக் கொள்வர். ஏனைய அகச்சமயத்தார்கள் பாடாணவாத சைவர் முதல் நிமித்தகாரண பரிணமவாத சைவர் ஈறாக அறுவகைப்படுவர். அவர்கள் சித்தாந்த

சைவத்தைப்போலப் பதி, பசு, பாசம் என்னும் பொருள்களை யுடன்பட்டவர்களானாலும் அவற்றிற்குக் கூறும் பொது இலக்கணம் சிறப்பு இலக்கணங்களில் மாறுபடுவர். அகப்புறச் சமயத்தார்கள் மாவிரதர் முதல் ஐக்கியவாத சைவர் ஈறாக அறுவகைப்படுவர். அவர்களில் ஐக்கியவாத சைவர் அல்லாத ஏனை ஐவரும் வேதாகமங்களன்றி, வேதாகம விரோதமான சில நூல்களைப் பரமப்பிரமாணமாகக் கொள்வர். ஐக்கியவாத சைவர் ஆணவ மலத்தை உடன்படார். புறச்சமயத்தார்கள் தார்க்கிகர் முதல் யோகவாதிகள் ஈறாக அறுவகைப்படுவர். அவர்கள் சிவாகமங்களை நிந்திப்பர்: அன்றியும் வேதத்திலும் தத்தமக்கு உடன்பாடான சில பகுதிகளை மட்டும் கொண்டு ஏனையவற்றைப் புறக்கணிப்பர். புறப்புறச் சமயத்தார்கள் உலோகாயதர் முதல் ஆருகதர் ஈறாக அறுவகைப்படுவர். இவர்கள் வேதாகமமிரண்டனையும் நிந்திக்கும் நாஸ்திகர்கள். இவ்விஷயம் சிவஞான மாபாடியத்தில் விளக்கப்பட்டது.

இதுவரை சமயங்கள் புறப்புறம், புறம், அகப்புறம், அகமென நால்வகைப்படும் எனவும், அவைகள் ஒவ்வொன்றும் அறுவகைப்படும் எனவும், சமயப் பாகுபாடுகள் வேத சிவாகமப் பொருள்களை யுடன்படல் பற்றியும் உடன்படாமை பற்றியுமே ஏற்பட்டன எனவும் தெரிந்தோம். சித்தாந்த சைவம் இவ்விருபத்துநான்கு சமயங்களையும் கடந்து ராஜாங்கத்தில் அமர்ந்திருப்பது எனவும் தெரிந்தோம்.

இனிச் சித்தாந்த சைவத்திற் பேசப்படும் பொருள்களைப்பற்றித் தெரிவோம். சித்தாந்த சைவத்திற் பேசப்படும் பொருள்கள் பதி, பசு, பாசம் என்னும் மூன்றுமாகும்.

'பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல்'

என்றருளினர் நமது உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.

"சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலா மொழிய நின்றன
ஆன்றதொர் தொல்பதி யாரு யிர்த்தொகை
வான்றிகழ் தளையென வகுப்ப ரன்னவே"

என்று கந்தபுராணத்திற் கூறப்பட்டது. இங்கே பதி யென்றது முழுமுதற் பொருளாகிய கடவுள். ஆருயிர்த் தொகையென்றது பசு. தளை யென்றது பாசம். இந்த மூன்று பொருள்களில் பதியாகிய கடவுளைப்பற்றிச் சித்தாந்த சைவ நூல்களாகிய வேத சிவாகமங்கள் யாது கூறுகின்றன? பதிக்குப் பெயராகச் சிவம் என்னும் சொல் வழங்கப்படுவதை நாம் காண்கிறோம். சிவமென்ற சொல் மங்கலம் என்னும் பொருளைத் தரும். சிவபெருமான் சிவத்துவமாகிய குறைவில்லாத மங்கல குணங்கள் தம்மிடம் உடையவராதலின் அவர் சிவனெனப்பட்டார். அன்றியும் நம்மைப்போலன்றி ஆணவம் முதலிய பாசக் கட்டினின்றும் அநாதியே நீங்கியவராதலாலும், அப்பெருமான் சிவனெனப்பட்டார். இவ்வுண்மை,

"அநாதிமல ஸம்ச்லேஷ ப்ராகபாவாத் ஸ்வபாவத:
அத்யந்த பரிசுத்தாத்மே த்யதோயம் சிவஉச்யதே
அதவாசேஷ கல்யாண குணைகதந ஈச்வர:
சிவஇத்யுச்யதே ஸத்பி: சிவதத்வார்த வேதிபி:"

என்று வாயு சம்ஹிதையில் கூறப்பட்டது. இப்பொருளை நமது திராவிட மாபாடியகாரராகிய ஸ்ரீ (108) மாதவச் சிவஞான சுவாமிகள்,

'குறைவிலா மங்கல குணத்த தாதலின்
நிறைமல மறுதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலோர்'

என்று அருளிச்செய்தார்கள். சிவமென்னும் சொற்பொருள் வேறு வகையாகவும் கூறப்படும். வடமொழியில் 'சீ' என்னும் தாது 'கிடத்தல்' என்று பொருள் படும். ஆகவே உலகத்தின் இறுதிக்காலத்தில் எல்லாப் பொருள்களும் பரம்பொருளாகிய முதல்வனிடம் ஒடுங்கிக்கிடத்தலால், அவர் சிவன் எனப்பட்டார்: அன்றி நல்லோர் மனம் தம்பாற் கிடத்தலானும் அவர் சிவனெனப்பட்டார் என்பதும் பொருந்தும். வேறுவகையாகவும் சிவசப்தப் பொருள் விளக்கப்படும். 'சி' என்றும் பகுதி வடமொழியில் மெலிவித்தல், மிகுவித்தல் என்னும் இரண்டு பொருள்களையும்தரும். ஆகவே உயிர்களுடைய பாசசக்தியை மெலிவித்துச் சிற்சத்தியை மிகுவிக்கின்றவர் ஆதலால் அப்பெருமான் சிவனென்று சொல்லப்பட்டார் என்பதாம். வர்ண விபரியயம் என்பது ஒன்று இலக்கணத்திலே பேசப்படும். அஃதாவது எழுத்து நிலைமாறுதலாம். வடமொழியில் 'ஹிம்ஸி' என்பது 'ஸிஹ்ம' என்றும் 'பச்யக' என்பது 'கச்யப' என்றும் வரும். அதுபோல வசி என்னும் சொல் சிவ என்று நிலைமாறியதாகக் கொண்டு சிவ சப்தத்திற்குக் 'காந்தி' என்று பொருள் கூறுவதும் பொருந்தும். இன்னும் பலவாறாகவும் சிவச் சொற்பொருள் விரிக்கப்படும். விரியுமாதலின் அமைக.

இச் 'சிவ' என்னும் திருநாமத்தை வேதம் தன்னுடைய இருதயத்தில் வைத்துப் போற்றும். வேதங்கள் 'த்ரயீ' என்னும் பெயரால் வழங்கப்படும். வேதம் நான்

காயினும் அதர்வவேதம் மற்றை மூன்றனுள் அடங்கும் என்னும் கருத்துப்பற்றி மூன்றெனப்பட்டது. ஆகவே இருக்கு, யசுர், சாமம் என்னும் மூன்றனுள் நடுவே உள்ளது யசுர்வேதம். அது ஏழு காண்டங்களை உடையது. அவற்றுள் நடுக்காண்டத்திலுள்ளது ஸ்ரீருத்திரமாகும். அந்த ஸ்ரீருத்திரத்தின் நடுவிலே 'நமச்சோமாயச' என்னும் அநுவாகத்தின் நடுவிலே உள்ளது 'நமச்சிவாய' என்பதாகும். இங்ஙனம் வேதம் இம்மந்திரத்தைப் போற்றுதலால் நமது ஸ்ரீஞானசம்பந்தப்பெருமான்,

'வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே,'

என்று அருளிச்செய்தார்கள். மேலும் வேதபுருஷனுக்கு ஸ்ரீருத்திரம் கண்ணும், அதனுள்ளிருக்கும் ஸ்ரீபஞ்சாக்ஷரம் கண்மணியும், அதனுள்ளிருக்கும் 'சிவ' என்பது அந்தமணியின் ஒளியுமாகும்.

இதுவரை 'சிவ' என்னும் சப்தத்தின் பொருளையும் வேதம் அம்மந்திரத்தைப்போற்றும் விதத்தையும் தெரிந்தோம். இனி அதனிலக்கணம் பல இருப்பினும் முடிவாகச் சுருக்கமாக "எது பிறப்பு இறப்பு இல்லாததோ அது சிவம்; எது பிறப்பிறப்பு உள்ளதோ அது சீவன்" எனச் சொல்லிவிடலாம். வேதம் 'நஜாயதே ந ம்ருயதே தேவா' என்று சிவபெருமானுக்குப் பிறப்பு இறப்பு இல்லாமையைக் கூறுகின்றது. ஸ்ரீஞானசம்பந்தப் பெருமான்

'பிறப்பில் பெருமான்' என்றும், திருமூலமா யோகிகள் 'பிறப்பிலி பேர்நந்தி', என்றும் சிவபெருமானை வழங்குகின்றார்கள். திராவிடமாபாஷ்யகாரராகிய நமது ஸ்ரீ (108) மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான சித்தியார் உரை

யிலே 'நால்வகை யோநியில் ஒரு யோநிவாய்ப்பட்டுப் பிறப்பன யாவை அவையெல்லாம் சீவ வர்க்கம்; அவ்வாறில்லாதது யாது அது சிவம்' என்று அறுதியிட்டு விளக்கியருளுகிறார்கள். அதர்வ சிரோபநிடதம் 'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸப்ர ஸூயந்தே' என்று தொடங்கிச் 'சிவ ஏகோ த்யேய: சிவம் கர: ஸர்வமங்யத் பரித்யஜ்ய ஸமாப்தா அதர்வசிகா' என்று ஏனைய பிரம விஷ்ணு முதலியவர்களுக்குப் பிறப்பு இறப்புக்களைக் கூறி, இவர்கள் இவ்வாறாதலின் காரணராகமாட்டார்கள்: மற்றவற்றைக் கைவிட்டு சிவன் ஒருவனையே தியானிக்கப்படும் பொருளாகக் கொள்க: அதர்வசிகை முற்றிற்று என்று நிர்ணயித்து விசிராந்தி அடைந்தது. மேலும் அவ்வுபநிடதம் சிவசப்தப் பொருளைச் 'சிவங்கர:' என்றும் விளக்கிற்று.

இன்னும் வேதாகமங்கள் சிவபெருமான் சத்சித் ஆனந்தப் பொருள் என்றும், அப்பெருமான் முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கை உணர்வு, தன்வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என்னும் ஆறு குணங்களையும் உடையவரென்றும் பலபடியாகக் கூறுமென்றாலும், அவைகளெல்லாம் விரிக்கப் புகுந்தால் விஷயம் விரியுமாதலின், இப்பொழுது பிறப்பிறப்பில்லாமை என்கிற ஓரிலக்கண அளவிலே பதியிலக்கணத்தை வைத்துக்கொள்வோம்.

இனிப் பசுக்களைப்பற்றித் தெரிவோம். பசுக்களென்றால் உயிர்களென்று தெரிந்தோம். இந்த உயிர்கள் எங்கிருந்தன எவ்வாறு தோன்றின என்னும் விஷயங்களை ஆராயத் தொடங்கினால் சில சமயங்கள் உயிரென்று ஒரு பொருள் முன்பு இல்லை: பின்பு கடவுளால் படைக்கப்பட்டது என்று கூறும். இவ்வாறு கூறுவதில் பல ஆட்சே

பனைகள் உண்டாகும். இல்லாத உயிர்களைக் கடவுள் ஏன் படைக்கவேண்டும்? இந்த உயிர்களைப் படையாததால் கடவுளுக்கு என்ன குறையிருந்தது? நாம் இப்பொழுது அநுபவிக்கும் துன்பப் பெருக்கைக் கவனித்துப் பார்த்தால் கடவுள் நம்மைத் துன்பம் அனுபவிப்பதற்காகவா படைத்தார்? இல்லாத உயிரைப் படைத்துத் துன்பம் அடையச் செய்பவர் கடவுள் ஆவரா? என்றெல்லாம் கேள்விகள் உண்டாகும்.

இன்னும் சடவுள் உயிரை எங்கிருந்து படைத்தார்? தம்மிடமிருந்து படைத்தாரென்றால் அவரைப்போலவே நாமும் இன்பமயமாய் இருக்கவேண்டுமே: பிறப்பிறப்பின்றி இல்லாதிருக்க வேண்டுமே: அவ்வாறில்லையே: ஆகவே கடவுளிடமிருந்து நாம் படைக்கப்படவில்லை. கடவுளுக்கு வேறாய் நாம் படைக்கப்படுமுன் இருப்பது உலகம் ஒன்றே. உலகத்தினின்றும் நம்மைப் படைத்தார் என்றால் உலகமோ அறிவில்லாத பொருள்: மண்ணாகிய சடத்தினின்றும் தோன்றிய பாண்டமும் சடமே. அதுபோல உலகத்தினின்றும் நாம் படைக்கப்பட்டால், நாமும் ஜடப்பொருளாகவே இருக்கவேண்டும். அவ்வாறில்லாமல் நமக்கு அறிவு காணப்படுகின்றதே: இதனால் உயிர்கள் படைக்கப்பட்ட பொருள்கள் அல்ல என்றும் விவகரிக்கப்படும்.

இவ்விஷயத்தில் நமது வேதாகமங்கள் யாது கூறுகின்றன? இந்த உயிர்கள் கடவுளாகிய சிவபெருமானைப்போல அநாதி நித்தியப் பொருள்களென்று நமது வேதாகமங்கள் கூறுகின்றன. சிவபெருமானும் அநாதி நித்தியப் பொருள். உயிர்களாகிய நாமும் அநாதி நித்தியப் பொருள் என்றால் இரண்டு பொருள்களுக்கும் வித்தியாசம் யாது? இவ்

விரண்டு பொருள்கட்கும் உள்ள வித்தியாசத்தை ஸ்ரீ அரதத்தாசாரிய சுவாமிகள் சுருதி சூக்தி மாலையில்,

ஆத்மாந்த ராணி பசவ: பரதந்த்ர பாவாத்
ஸ்வாதந்த்ர்யத: பசுபதே பதிரீச்வரத்வம்
ஆத்மாந மௌபநிஷதா: ப்ரவதந்த்யநீசம்
ஈசம்பவந்தமுபயோ ருபயம் ஸ்வபாவ:

என்றருளினர். இதன் பொருள் 'ஆன்மாக்களெல்லாம் பரதந்திர முடைமையாற் பசுக்களெனப்படும்: சிவபிரான் சுதந்திர முடைமையால் அப் பசுக்களுக்குப் பதியெனப்படுவர். சுவேதாச்சுவதரோபநிடத முதலியன ஆன்மாக்களுக்கு அநீசத்துவமும் சிவபிரானுக்கு ஈசத்துவமும் கூறும். இனி அவற்றிற்கும் அவருக்கும் அவ்விரு தன்மையும் இயற்கையே யென்க' என்பதாம். இதனைப் பருப்பொருளாயுள்ள ஓர் உதாரணத்தால் விளக்குவோம். தங்கம் இரும்பு என்னும் இரண்டு உலோகங்களும் ஒரு காலத்திருக்கின்றன. ஒருகாலத்தி லிருக்கின்றன என்ற காரணத்தால் அவற்றிற்குள் வேற்றுமை இல்லாமற் போகுமா? வேற்றுமை யிருக்கிறது. தங்கத்தில் துருப் பிடியாது: இரும்பிலே துருப்பிடிக்கும். இவ்விதம் ஒரு காலத்திலே யுள்ள இரண்டு பொருள்களில் தன்மை வேறுபட்டதனால், இரண்டும் வேறு வேறு பொருளென்று நிச்சயிக்கின்றோம். அதுபோலச் சிவமும் உயிர்களும் அநாதி நித்தியப் பொருள்களாயினும், சிவம் தங்கத்தைப் போன்று அநாதியே ஆணவாதிமல சம்பந்தமில்லாத பொருள்: உயிர்கள் இரும்பைப்போன்று அநாதியே ஆணவமல சம்பந்த முடைய பொருள் என்று இலக்கணத்தின் வித்தியாசமிருத்தலின், இரண்டும் வேறு - வேறு பொருள்கள் என்பது நிச்சயிக்கப்படும். இதுவரை கூறியத

ஞல் உயிர்கள் கடவுளைப்போல அநாதி நித்தியப் பொருள் என்பதும், அவை படைக்கப்பட்ட பொருள்களல்ல என்பதும், அவை ஆணவ முதலிய பந்தங்களை யுடையன என்பதும் தெரிந்தோம்.

இனிப் பாசத்தைப்பற்றி விசாரிப்பாம். பாசம் என்பது தொகையால் ஒன்றுக்கூறப்படினும் வகைப்படுத்திப் பார்க்குமிடத்து அது ஆணவம், கன்மம், மாயை என்று மூன்றுவகைப்படும். இம்மூன்றனுள் ஆணவமென்பது சகசமலம் என்றும் மற்றைக் கன்மம் மாயை என்னும் இரண்டும் ஆகந்துகமலம் என்றும் சொல்லப்படும். ஆணவமென்பது எங்ஙனம் இரும்புக்குச் சகசமாய்க் களையாகிய துரு உள்ளதோ அதுபோல அங்ஙனம் உயிர்களைப்பற்றியிருக்கின்ற குற்றமாகும். பரமகருணாமூர்த்தியாகிய சிவபெருமான் நம்மீது வைத்த பெருங்கருணையினாலே பொல்லாத ஆணவத்தைப் போக்குவதற்காக ஏனை யிருமலங்களாகிய கன்மம், மாயை என்பவற்றைக் கூட்டியருளினார். இதனைச் சாதாரணமாக உவமையில் வைத்து நமது சித்தாந்த சாஸ்திரம் விளக்கும் ஒரு வெண்மையான ஆடையிலே அழுக்குப் படிந்திருக்கின்றது. அந்த அழுக்கை நீக்குவதற்கு வண்ணான் சாணி, உவர் என்னும் வேறிரண்டு அழுக்குகளை ஏற்றுவன்: ஏற்றி அவை அனைத்தையும் கழிப்பான். அதுபோலப் பரமகருணாமூர்த்தியாகிய ஸ்ரீ சிவபெருமான் நம்மைப் பந்தித்த ஆணவமலத்தை ஏனை இருமலங்களையும் கூட்டிக் கழிப்பன். உயிர்களில் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரெனப்படும் பாகுபாடும் ஆணவமலத்தின் ஆவாரகசக்தி அதோகியாமிகாசக்தி யென்பனவும் கர்மமலத்தின் பாகுபாடான சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் என்பனவும் மாயாமலத்தின் பாகுபாடான சுத்தமாயை

அசுத்தமாயை என்பனவும் சித்தாந்த சாஸ்திரங்களில் விரிவாகக் கூறப்பட்டன.

இதுகாறும் சைவ சமயத்திற் கூறப்படும் பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களைப்பற்றிப் பொது வகையாகச் சிறிது தெரிந்தோம். இனிச் சைவ சித்தாந்தத்திற் கூறப்படும் முத்தியைத் தெரிவோம். பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைவதே முத்தியாகும். அதுவே உயிரடையும் பரமானந்த நிலயமாகிய மோக்ஷநிலை. நமது சிவஞான சித்தியார் நாம் அநுட்டிக்கவேண்டிய காரியங்களையும் அவற்றால் நாம் எய்தும் பயனையும் பின்வருமாறு சுருக்கமாகவும் விளக்கமாகவும் அருளுகின்றது.

படிக்கு நூல்கள் சிவாக மம்பசு
பாச மோடு பதித்திறம்
எடுத்தி யம்புவ தீசன் வார்கழல்
ஏத்தி டுந்தொழி லென்றுமே
விடுத்தி டும்பொருள் காம மாதிகள்
வேண்டி டும்பொரு ளீண்டருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மல
ளோடு நின்றிடன் முத்தியே.

திருச்சிற்றம்பலம்.

# பின்னுரை.

இதுவரை எனது அறிவு என்னும் கொள்கலம் வேத சிவாகமங்கள் பன்னிரு திருமுறைகள் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்கள் என்னும் மகோததியில் திருவருட் டுணைகொண்டு எவ்வளவு முகந்ததோ அவ்வளவில் என் கடமையைச் செய்தேன். இத்துணைப் பொழுதும் ஆதரவுடன் இப்பொருளைக் கேட்ட உங்கட்கு எனது நமஸ்காரம்.

# ஆதீன வெளியீடுகள்.

1. முத்திபஞ்சாக்கர மாலை, பஞ்சாக்கர தேசிகர் மாலை—உரையுடன்.
2. ஞான பூசாவிதி—பழைய உரையுடன்.
3. நல்லூர் மாசி மக மகோற்சவ வைபவம்.
4. மண்ணிப்படிக்கரை (இருப்பைப்பட்டு) ஸ்தல மாகாத்மியம்.
5. காருண்யாமிர்த தீர்த்த மகிமை.
6. இராமாயண தாற்பரிய சங்கிரகம்—உரையுடன்.
7. ஸ்ரீமத் மாதவச் சிவஞான சுவாமிகள்மீது தோத்திரப்பா (முதற்பாகம்)—உரையுடன்.
8. சிவஞானபோதம் (சூத்திரம்) மூலமும் உரையும்.
9. சித்தாந்த மரபு, சித்தாந்த மரபு கண்டனம், சித்தாந்த மரபு கண்டன கண்டனம்—குறிப்புரையுடன்.
10. நமசிவாயமூர்த்தி மும்மணிக்கோவை—உரையுடன்.
11. திருநெல்வேலித் தேவாரப் பதிகம்—உரையுடன்.
12. ஸ்ரீமத் மாதவச் சிவஞான சுவாமிகள்மீது தோத்திரப்பா (இரண்டாம் பாகம்)—உரையுடன்.
13. சைவ சமயம்.
14. பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி-உரையுடன். (அச்சில்)
15. வைதிக சைவ மகாசிவராத்திரி நிர்ணயம். (அச்சில்)